DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 127/2023

List of Witness : Lw7

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகேசன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | நல்லதம்பி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 07/07/2026

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகளின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கேதையறும்பில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில் புகார்தாரரான நந்தினி எனது பங்காளியான மூர்த்தியின் மகள் ஆவார். நந்தினிக்கு சந்தானபாரதிக்கும் 2018 ஆம் வருடம் திருமணம் நடந்தது. திருமணத்திற்காக 45 பவுனும், சீர்வரிசையும் செய்ததாக சொன்னார்கள். அ.சா.1னின் கணவரான சந்தானபாரதி 25 லட்சம் கொடுத்து வேலைக்கு சேர்ந்து இருப்பதாகவும், அந்த பணத்தை கொடுத்ததால் தான் இங்கே இருக்க முடியும் என்று சொல்லி நந்தினியிடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார். இந்த பிரச்சனையால் நந்தினி அவருடைய அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார். அதன்பின்னர் சந்தானபாரதி நந்தினிக்குரிய நகைகளை கொடுத்துவிட்டதாக சொன்னார்கள். ஆனால் எவ்வளவு திருப்பி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கின் சங்கதிகளை குறித்து அ.சா.1 ன் அப்பா மூர்த்தி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி செல்வராஜ் மற்றும்இந்திராணி அவர்களது பூர்வீக சொத்துக்களை நான்காம் எதிரியான அமுதவள்ளிக்கு எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த பூர்வீக சொத்துக்களை 4வது எதிரிக்கு எழுதிக் கொடுத்த பின்னர் தான் அ.சா.1 இந்த புகாரை கொடுத்துள்ளார் என்றால்

சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளததைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவுக்காரர் என்பதால் நான் இந்த வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகள் அ.சா.1–யிடம் வரதட்சனை கேட்டு துன்புறுத்தவில்லை என்றால் சரிதான்.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.07 17:31:02 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 07/07/2026